


# 27.9.2024

## தலைப்புச் செய்திகள்

1. மனித சமுதாயத்தை இணைக்கும் பாலமாக சுற்றுலா திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

2. தமிழக திட்டங்களுக்கு நிதி வழங்குவது குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடியை, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினார்.

3. அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின்கீழ் இதுவரை 80 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சம் தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் 300 இடங்களில் சுற்றுலா வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

5. இந்தியாவிற்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 3 விக்கெட் இழப்பிற்கு 81 ரன் எடுத்திருந்தது.

இனிவிரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

சுற்றுலா தினம்

**சர்வதேச சுற்றுலா தினம் இன்று கொண்டாடப் படுகிறது.**

மக்களை இணைத்து, பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் செப்டம்பர் 27-ம் தேதி இத்தினம் கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப்தன்கர், மனித நேயத்தை இணைக்கும் சங்கிலியாக சுற்றுலா திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

உலகம் முழுவதும் விரும்பும் அமைதியை சுற்றுலா முன்னெடுத்துச்செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாடுகளில் போர் உள்ளிட்ட சம்பவங்களால் விநியோக சங்கிலி பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், இந்த ஆண்டின் கருப்பொருளான "சுற்றுலா மற்றும் அமைதி" இத்தருணத்தில் முக்கியம் பெறுவதாக குறிப்பிட்டார்.

ஜனநாயக நாடான எழுச்சி மிகு பாரதத்திற்கு இக்கருப்பொருள் பொருந்துவதாக எடுத்துரைத்தார்.

சர்வதேச பொருளாதார மேம்பாடு, சமூக முன்னேற்றம், கலாச்சார பரிவர்த்தனைகளின் கொண்டாட்டமாக உலக சுற்றுலா தினம் திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய சுற்றுலா அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் பல மாறுபட்ட கலாச்சாரங்களையும், தேசங்களையும் இணைக்கும் பரஸ்பர பாலமாக சுற்றுலா திகழ்கிறது என்றார்.

ஒட்டுமொத்த சுற்றுலாவிற்கான சிறப்பு பட்டியலை விரைவில் சுற்றுலா அமைச்சகம் வெளியிடும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு சுற்றுலா கிராம விருதுகளை அவர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் – பிரதமர் சந்திப்பு

பிரதமர் திரு. நரேந்திரமோடியை, தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் புதுதில்லியில் இன்று சந்தித்து பேசினார்.

சென்னை மெட்ரோ ரயில் 2-ம் கட்ட திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பங்களிப்பான, 7 ஆயிரத்து 425 கோடி ரூபாயை விரைந்து விடுவிக்குமாறு பிரதமரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஒருங்கிணைந்த பள்ளி கல்வி திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய நிதியை விடுவிக்கவும் பிரதமரிடம் முதலமைச்சர் வலியுறுத்தினார்.

இலங்கை கடற்படைனரால் தமிழக மீனவர்கள் அடிக்கடி கைது செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

மீனவர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் பிரதமரிடம், முதலமைச்சர் வழங்கினார்.

தமிழகத்தின் பாரம்பரியத்தை பறைசாற்றும் நினைவு பரிசையும் பிரதமரிடம், முதலமைச்சர் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் இக்கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்ததாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 114-வது முறையாக வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணிக்கு மக்களிடையே தமது எண்ணங்களை பகிர்ந்துகொள்கிறார்

இதில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

mygov.in, நமோ செயலி, 18 00 11 78 00 என்ற தொலைபேசி எண்ணில் பொதுமக்கள் இன்று மாலைக்குள் தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖

ஜம்மு காஷ்மீர்

ஜம்மு காஷ்மீரில் வரும் ஒன்றாம் தேதி நடைபெறும் 3-வது, இறுதி கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

ஜம்முவில் நாளை நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி உரையாற்றுகிறார்.

காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல்காந்தி பல்வேறு இடங்களில் இன்று தேர்தல் பரப்புரையில் அங்கு ஈடுபட்டார்.

ஹரியானாவில் வரும் 5-ம் தேதி நடைபெறவுள்ள ஒரே கட்ட சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி குருக் ஷேத்ரா மாவட்டத்தில் பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு. அமித்ஷா தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஆம் ஆத்மி உள்ளிட்ட பிராந்திய கட்சிகளும் தத்தம் வேட்பாளர்களுக்கு ஆதரவாக களமிறங்கியுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்ற நிலைக்குழு

**பல்வேறு துறைகளின் நாடாளுமன்ற** நிலைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்படி நிலக்கரி, சுரங்கம் மற்றும் எஃகு துறையின் நிலைக்குழு தலைவராக முன்னாள் மத்திய அமைச்சரும், பி.ஜே.பி. உறுப்பினருமான திரு. அனுராக் சிங் தாகூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதித்துறை நிலைக்குழு தலைவராக பி.ஜே.பி. உறுப்பினர் திரு. பார்த்ரு ஹரியும்,

வெளியுறவுத்துறையின் தலைவராக காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசி தரூரும்

தொழில்துறை தலைவராக திமுக உறுப்பினர் திரு. திருச்சி என். சிவாவும்,

நுகர்வோர் விவகாரம், உணவு பொது விநியோகத்துறை நிலைக்குழு தலைவராக திருமதி. கனிமொழியும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

## மரக்கன்றுகள்

காடு வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ் இதுவரை நாடுமுழுவதும் 80 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுசூழல் வனத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜுன் 5-ம் தேதி, உலக சுற்றுசூழல் தினத்தன்று பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் மரம் நடும் இயக்கத்தை தொடங்கி வைத்த நிலையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை 5 தினங்களுக்கு முன்னதாகவே எட்டிவிட்டதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது

அரசு முகமைகள், உள்ளூர் மக்கள் மற்றும் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த பங்களிப்பால் இந்த இயக்கம் வெற்றியடைந்ததாக அமைச்சகம் கூறியுள்ளது.

உத்தரபிரதேச மாநிலத்தில் 26 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

## கல்லீரல் வீக்க நோய்

கல்லீரல் கொழுப்பு தேக்க நோய் கட்டுப்பாடு செயல்முறை விளக்க கையேட்டை மத்திய அரசு இன்று வெளியிட்டது.

மத்திய சுகாதார குடும்பநலத் துறை செயலர் திரு. அபூர்வ சந்திரா இன்று இதனை வெளியிட்டார்.

மதுபானம் பயன்படுத்தாதோருக்கு ஏற்படும் கல்லீரல் கொழுப்பு நோயை கண்டறிந்து தேவையான சிகிச்சைகளையும்,

பயிற்சிகளையும் வழங்க இவ்வழிமுறைகள் வகை செய்வதாக அவர் கூறினார்.

கல்லீரல் வீக்கநோய் சவால்களை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து ஐ.நா.சபையில் எடுத்துரைக்க விரைவில் உயர்மட்டக் குழுவை மத்திய அரசு ஏற்படுத்தும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள நோக்கியா உள்ளிட்ட தொழிற்சாலைகளை மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா இன்று ஆய்வுசெய்கிறார்.

2 நாள் பணமாக தமிழகம் வந்துள்ள அமைச்சர் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தனியார் தொழிற்சாலைகளை ஆய்வுசெய்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

நீலகிரி:

தமிழகத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் 300 இடங்களில் சுற்றுலா வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.க.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுலா தினத்தையொட்டி, உதகையில் விழிப்புணர்வு பேரணியை இன்று தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குறிப்பாக மலை மாவட்டங்கள், கிராமப்புறங்கள், கடற்கரைகள் என 12

பிரிவுகளாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மாநில பொருளாதாரத்தில் 7 சதவீத வருவாய் சுற்றுலாத்துறை மூலம் கிடைத்து வருவதாகவும், இதனை மேலும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்தார்.

தமிழகத்தின் பொருளாதாரத்தை வரும் 2030ம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்த தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ள நிலையில், அதை நிறைவேற்றுதில் சுற்றுலாத்துறை முக்கியப்பங்காற்றும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**சுற்றுலா தினம் தொடர்ச்சி**

இந்நாளையொட்டி கொடைக்கானலில் 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு நடைபெற்ற சிறப்பு மாரத்தான் போட்டியில் ஏராளமான பள்ளி கல்லூரி மாணாக்கர் பங்கேற்றனர்.

**கன்னியாகுமரிக்கு** வருகை புரிந்த சுற்றுலா பயணிகளுக்கு படகுதளத்தில் சங்கு, பாசி மாலை அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**தர்மபுரி வாய்ஸ்:**

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, சுற்றுலா தலத்தை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**தலைமை நீதிபதி**

**சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக ஸ்ரீராம்** ராஜேந்திரன் இன்று பதவியேற்றார்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. **R.N.** ரவி அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

திரு. ஸ்ரீராம் மும்பை உயர்நீதி மன்ற நீதிபதியாக இதுவரை பணியாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் குடியரசு தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த், மாநில அமைச்சர்கள் திரு. துரைமுருகன், திரு. ரகுபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**தூத்துக்குடி - சுரேஷ்பாபு**

**தூத்துக்குடி துறைமுகத்தில் நடைபெற்றுவரும்** வடக்கு சரக்கு தளம் அமைக்கும் பணி வரும் 2026ம் ஆண்டிற்குள் முடிவடையும் என்று துறைமுக ஆணையத்தலைவர் திரு. சுரேஷ்பாபு தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில்கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் குறித்த கூட்டத்தில் இன்று

உரையாற்றியஅவர், இப்பணிகள் முடிவடைந்த பின்னர் கூடுதலாக 6 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை கையாள முடியும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

## வெப்படை விபத்து

நாமக்கல் மாவட்டம் வெப்படையில் வாகனத்தை இடித்து தள்ளி நிற்காமல் சென்ற கண்டைனர் லாரியை காவல்துறையினர் பறிமுதல் செய்து ஓட்டுனரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சேலம் - ஈரோடு தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்ற இந்த சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் காவல்துறையினர் குவிக்கப்பட்டு, லாரியில் இருந்த வடமாநிலத்தவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த சம்வத்தில் ஒருவர் உயிரிழந்ததாகவும், காவல்துறையினர் காயமடைந்துள்ளதாகவும் நாமக்கல் மாவட்ட காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖

## விபத்து

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே தனியார் மினி பேருந்து கவிழ்ந்ததில் பள்ளி மாணவன் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 10 பேர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்

விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே இவ்விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபாயும்

பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவி வழங்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

திருச்சி மாவட்டத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு வரும் 2-ம் தேதி காலை கிராம சபை கூட்டம் நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் காது கேளாதோர் மற்றும் சைகை மொழி வாரத்தை ஒட்டி விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு. தர்ப்பகராஜ் இன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நாமக்கல்லில் மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது

சிறுபான்மையினரின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் பக்தர்களுக்கு வழங்கப்படும் அன்னதான உணவின் தரம்

குறித்து தமிழ்நாடு சட்டப்பேரவை உறுதிமொழி ஏற்புக்குழு இன்று கேட்டறிந்தது.

**மதுரை மாவட்ட ஆட்சியர் அலவலக** வளாகத்தில் மகளிர் திட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டுள்ள சிறுதானிய சிற்றுண்டி விடுதியை ஆட்சித் தலைவர் திருமதி. சங்கீதா இன்று தொடங்கி வைத்தார்

கோஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையையும் அவர் துவக்கிவைத்தார்.

**திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்** தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பில் ஜமால் முகமது கல்லூரியில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை காலை நடைபெறுகிறது.

**உதகையில் 2-வது சீசனையொட்டி** அரசு தாவரவியல் பூங்காவில் மலர் தொட்டிகள் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு இன்று தொடங்கிவைத்தார்.

**சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர்** கோப்பைக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.**K.R.**பெரியகருப்பன் இன்று பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில்** வனப்பரப்பை 33 சதவிகிதமாக அதிகரிக்கும் வகையில் தேக்கு, கொய்யா, நெல்லி உள்ளிட்ட மரக்கன்றுகளை பொதுமக்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட வனஅலுவலர் திரு. குகனேஷ் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

சூரசம்ஹாரம்

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டினத்தில் தசரா திருவிழா வரும் 3-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது

முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் வரும் 12-ம் தேதி குலசேகர பட்டினம் கடற்கரையில் நடைபெறவுள்ள நிலையில், அங்கு குவியும் பக்தர்கள் பல்வேறு வேடங்களை அணிவதற்கான வேடபொருட்கள் கிரீடங்கள் உற்பத்தி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

கான்பூரில் இந்தியாவிற்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று பங்களாதேஷ் தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 3 விக்கெட் இழப்பிற்கு 94 ரன் எடுத்திருந்தது.

ஆகாஷ்தீப் 2 விக்கெட்டையும்,

அஸ்வின் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖